மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No. 14/2022

வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி	:	**வாசா. 1**
பெயர்	:	**குழந்தைச்சாமி**
தகப்பனார்/கணவர் பெயர்	:	**கவுரிவேல்**
தொழில்	:	
கிராமம்	:	
தாலுகா	:	

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் வியாழன் 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

1. 29.05.1993 தேதிய வாதி பெயரில் தாவா 1 வது இலக்க சொத்திற்கு அரசால் கொடுக்கப்பட்ட நத்தம் பட்டா – அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 11.02.2002 தேதிய தாவா சொத்திற்கு வீரசேகரன் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா 10(1) அடங்கல் – கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. தாவா சொத்திற்குள் வாதியால் கட்டப்பட்டுள்ள கூரை காலணி

வீட்டின் வரி ரசீதுகள் (9) – அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. தாவா சொத்திற்குள் வாதியால் கட்டப்பட்டுள்ள கூரை காலணி வீட்டின் மின்வாரிய ரசீதுகள்(2) அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. வாதியின் ஆதார் அட்டை – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. தண்ணீர் வரி ரசீது (1) – அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறீயிடு செய்யவதற்கு முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.13 15:23:37 +0530